தினமணி

**புரட்டிப் போட்ட புயலிலும் பூத்துக் குலுங்கும் மாமரங்கள்**

First Published : 02 Feb 2012 01:05:19 AM IST



புயலுக்குப்பின் துளிர்விட்டு பூத்துக் குலுங்கும் மாமரம்.

கடலூர், பிப்1: புயல் புரட்டிப் போட்டதால் பாதிக்கப்பட்ட நிலையிலும், கடமை தவறாத மாமரங்கள் பூத்துக் குலுங்கத் தொடங்கியுள்ளன.

கடலூர் மாவட்டத்தில் குறிப்பாக கடலூர், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி வட்டங்களில், 625 ஏக்கரில் மாமரங்கள் இருந்தன. இதில் 300 ஏக்கர் மாமரங்கள் முழுவதும் புயலில் வேருடன் சாய்ந்து அழிந்த விட்டதாக வேளாண் துறை தெரிவிக்கிறது. ஏனைய 325 ஏக்கரில் உள்ள மாமரங்கள் பெரும்பாலானவை கிளைகள் ஒடிந்தும், இலைகள் முற்றிலும் உதிர்ந்தும், மீண்டும் தேருமா என்ற நிலையில் காணப்பட்டன.

கிளைகள் பலவும் முறிந்து காணப்பட்ட மா மரங்கள் பலவற்றில், அண்மையில் இலைகள் துளிர்விடத் தொடங்கியதைத் தொடர்ந்து, இப்போது பூக்களும் கொத்து கொத்தாக பூக்கத் தொடங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

இதுகுறித்து சங்கொலிக்குப்பம் விவசாயி ராமலிங்கம் கூறுகையில், 10 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த மாமரங்களில் பல மரங்கள், புயலில் சேதம் அடைந்து விட்டன. ஏராளமான மரங்கள் ஒடிந்தும், சிதைந்தும் பரிதாபமாகக் காணப் பட்டன. அவற்றில் சில மரங்கள் துளிர் விட்டு பூக்கவும் தொடங்கி இருக்கின்றன.

கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் கணிசமான அளவுக்கு மாம்பழங்கள் விற்பனைக்கு வரும். பொதுவாக பிற மாவட்டங்களில் இருந்து மாம்பழம் வரத்து குறையும் தருவாயில், கடலூர் மாவட்ட மாம்பழங்கள் சந்தைக்கு வரும்.

எனவே கடலூர் மாவட்ட மாம்பழ விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். ஆனால் புயல் பாதிப்பால், மாம்பழ வருவாய் இனி கிடைக்குமா என்றே தெரியவில்லை என்றார்.

இதுகுறித்து வேளாண் அலுவலர்கள் கூறுகையில், கடலூர் மாவட்டத்தில் ஜனவரி மாத இறுதியில் மாமரங்கள் பூக்கத் தொடங்கும், மே மாதம் பழங்கள் விற்பனைக்கு வரும். புயலில் முறிந்து கிடந்த மாமரங்கள் பலவற்றில் துளிர் வந்து இருக்கிறது. பூக்கள் பூக்கவும் தொடங்கி இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு உருவான புதுத் துளிரில் இருந்து வெளிவரும், பூக்களில் பிஞ்சு பிடிக்குமா என்பது சந்தேகமே. அடுத்த ஆண்டுதான் இவற்றில் பழங்களை எதிர்பார்க்க முடியும் என்றார்கள்.

முறிந்து கிடந்த மா மரங்கள் ஆனாலும் சீசன் வந்ததும், துளிர்விட்டு பூத்துக் குலுங்கி, தங்களது கடமையை தவறாமல் நிறைவேற்றி விட்டன. பூக்களை காய்களாக, கனிகளாக மாற்றும் அற்புதத்தை இயற்கைதான் நிகழ்த்த வேண்டும்.

படம்: வி.சிவபாலன்

**புயல் பாதித்த கரும்பு, தென்னைக்கு பராமரிப்பு முறைகள்**

First Published : 02 Feb 2012 12:45:45 AM IST



புயலில் சேதம் அடைந்த தென்னையின் குருத்தில் மருந்து தெளித்து, மரத்தைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயி.

கடலூர்: புயலால் பாதிக்கப்பட்ட கரும்பு மற்றும் தென்னைப் பயிர்களைத் தொடர்ந்துப் பராமரிப்பது குறித்த வேளாண் வழிமுறைகளை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அறிவித்து உள்ளது.

÷கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் புயல் பாதிப்பால் 1.5 லட்சம் தென்னை மரங்கள் விழுந்து விட்டன. உயிருடன் நிற்கும் தென்னை மரங்களில் ஆயிரக்கணக்கானவை, ஒருசில மட்டைகளுடன், மொட்டை மரங்களாகக் காட்சி அளிக்கின்றன. கரும்புப் பயிர்களும் பெருமளவில் சேதம் அடைந்து விட்டன.

÷எனவே பாதிக்கப்பட்ட கரும்பு மற்றும் தென்னை மரங்களைப் பராமரிக்கும் முறைகளை, வேளாண் பல்கலைக்கழகத்தின் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் நசீர் அகமது தெரிவித்தது:

**கரும்பு**

÷புயலில் பாதிக்கப்பட்டவை இளம் கரும்பாயின், இலைகள் கிழிந்த மற்றும் சாய்ந்த கரும்புகளை நிமிர்த்தி, மண் அணைக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட உரங்களுடன் பசுஅம கரும்பு பூஸ்டர் என்ற ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த கலவையை, ஏக்கருக்கு 2, 3 மற்றும் 4 கிலோ என்ற அளவில், கரும்பு நட்ட 40, 60, மற்றும் 75-ம் நாள்களில் 15 நாள்கள் இடைவெளியில் இலைகளில் தெளிக்க
வேண்டும்.

÷இதனால் சேதம் அடைந்த கரும்பு தெளிவடையும். நீர் மேலாண்மையைக் கண்காணிக்க வேண்டும்.

÷4 முதல் 6 மாதக் கரும்பாயின், அவற்றை நிமிர்த்தி, சோலைகளை உரித்து விட்டம் கட்டிப் பராமரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட 6 முதல் 7 மாதக் கரும்பில் வேர்கள் இறங்காது இருந்தால், அவைகளை விதைக் கரும்பாக பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

÷அக்கரும்புகளை பரு கரணைகளாக பாலித்தீன் பைகளில் முளைக்க வைத்து 30, 35 நாள்கள் வயது நாற்றுகளாக நடவு செய்யப் பயன்படுத்தலாம்.

÷7 மாதங்களுக்கு மேற்பட்ட புயலால் பாதிக்கப்பட்ட கரும்பு, ஒடிந்து, பருக்கள் முளைத்து மோசமாக இருந்தால், அறுவடை செய்து ஆலைகளுக்கு அனுப்பிவிட வேண்டும்.

**தென்னை**

÷புயலால் தென்னை மரங்கள் வேருடன் சாய்ந்தும், குருத்து ஒடிந்தும், மட்டைகள் ஒடிந்தும், குரும்பைகள், காய்கள் உதிர்ந்தும் காணப்படுகின்றன.

÷குருத்தும், மட்டைகளும் ஒடிந்த தென்னை மரங்களைக் காப்பாற்ற, பழுத்து ஒடிந்த மட்டைகளை கூரிய கத்திக் கொண்டு சாய்வாகச் சீவி அகற்ற வேண்டும். ஒடிந்த நடுக் குருத்தைச் சுற்றியப் பகுதிகளை சுத்தம் செய்து, மட்டைகளை வெட்டிய பகுதிகளில் காப்பர் ஆக்ஸி குளோரைடு எனும் பூஞ்சாணக் கொல்லி (ஒரு பங்கு தண்ணீர் 2 பங்கு பைட்டோலான்) கலவையைப் பூசிவிட
வேண்டும்.

÷குருத்துப் பகுதியில் காயம்பட்ட இடத்தில் இதே பூஞ்சாணக் கொல்லியில் 2 கிராம் எடுத்து, ஒரு லிட்டர் நீரில் கலந்து ஊற்ற வேண்டும். இதனால் வெட்டுப் பகுதியிலும் குருத்துப் பகுதியிலும் நோய்த் தாக்குதலைத் தவிர்க்கலாம்.


÷பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட உரங்களான ஆண்டுக்கு ஒரு மரத்துக்கு 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் மற்றும் 3 கிலோ பொட்டாஷை 6 மாதங்களுக்கு ஒரு முறைப் பிரித்து இடவேண்டும்.

÷ஊட்டச்சத்துகள் மற்றும் பயிர் ஊக்கிகள் கலந்த பசுஅம தென்னை டானிக்கை மரம் ஒன்றுக்கு ஆண்டுக்கு 2 பாக்கெட் (200 மில்லி) என்ற அளவில், 6 மாத இடைவெளியில் வேர் மூலம் கொடுக்க வேண்டும்.

÷மேற்கண்ட பராமரிப்பு முறைகள் மூலம், புயலால் பாதிக்கப்பட்ட கரும்பு மற்றும் தென்னைப் பயிர்களின் மகசூல் திறனை அதிகரிக்கலாம்.

**பூண்டு: இருப்பு வைக்காமல் விற்கலாம்!**

First Published : 02 Feb 2012 12:44:33 AM IST



கோவை: பூண்டின் விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லாததால், விவசாயிகள் இருப்பு வைக்காமல் விற்பனை செய்யலாம் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

÷பூண்டு ஒரு முக்கிய நறுமணப் பயிர் ஆகும். இது வாசனை மற்றும் சுவையூட்டும் பொருளாக இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வெங்காயத்தைப் பயன்படுத்துவோரில் பலர் இதைப் பயன்படுத்துகின்றனர்.

÷மற்ற நறுமண வகைப் பயிர்களை ஒப்பிடுகையில் பூண்டு அதிக சத்துள்ள ஒன்றாகும். இதில் புரதம், பாஸ்பரஸ், பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம், கார்போஹைட்ரேட் ஆகியவை நிறைந்துள்ளன.

÷உலக அளவில் பூண்டு சீனாவில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. உலக மொத்த உற்பத்தியில் சீனாவின் பங்களிப்பு 56.85 சதவீதம். அதைத் தொடர்ந்து இந்தியா (15 சதவீதம்), வங்கதேசம் (2.50 சதவீதம்), மியான்மர் (2.19 சதவீதம்), கொரியா (2.19 சதவீதம்) மற்றும் ரஷியா (1.98 சதவீதம்) ஆகிய நாடுகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

÷பூண்டை இறக்குமதி செய்து கொண்டிருந்த இந்தியா, இப்போது மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு மாறியுள்ளது. இதற்குக் காரணம் 2009-10 ம் ஆண்டில்

சீனாவின் வரத்து குறைந்து இந்தியாவில் அதிகரித்ததே ஆகும். இந்தியா இப்போது வங்கதேசம் மட்டுமல்லாது பாகிஸ்தான், தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளுக்கு பூண்டை ஏற்றுமதி செய்கிறது.

÷நறுமண பொருள் வாரியத் தகவலின்படி 2010-11 ம் ஆண்டில் இந்தியாவின் பூண்டு ஏற்றுமதி 17,300 டன்கள் ஆகும். அதன் மதிப்பு ரூ. 69.77 கோடியாகும். ஏற்றுமதி அளவீட்டில் 62.14 சதவீதமும், மதிப்பீட்டில் 43.60 சதவீதமும் 2010-11 ம் ஆண்டில் உயர்ந்துள்ளதாக நறுமணப் பொருள் வாரியம் குறிப்பிடுகிறது.

÷இந்தியாவில் அதிக அளவு பற்களையுடைய பூண்டு ரகங்களே பயிரிடப்படுகின்றன. இவை உள்நாட்டில் விற்கப்படுகின்றன. ஆனால் பெரியதும், குறைவான எண்ணிக்கையிலுமான பற்களையுடைய ரகங்களே ஏற்றுமதிக்கு முன்னுரிமை பெறுகின்றன.

÷பூண்டு பயிரிடப்படும் பரப்பு மற்றும் உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் பூண்டு 2.09 லட்சம் ஹெக்டரில் பயிரிடப்பட்டு 12.64 லட்சன் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

÷இந்தியாவில் மத்தியப்பிரதேசம் பூண்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 26 சதவீதம் பூண்டு இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அதைத் தொடர்ந்து, குஜராத் (19.11 சதவீதம்), உத்தரப்பிரதேசம் (16.77 சதவீதம்), ராஜஸ்தான்

(11 சதவீதம்), ஒடிசா (5.25 சதவீதம்), பீகார் (16.77 சதவீதம்) ஆகியவை முக்கியப் பங்கு வகிக்கின்றன.

÷செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் பூண்டு விதைக்கப்பட்டு பிப்ரவரி-மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட ஊட்டி 1 ரகமே நீலகிரி மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

÷தமிழ்நாட்டில் அக்டோபர்-நவம்பர் மற்றும் ஜூன்-ஜூலை ஆகிய இரு பருவங்களில் பூண்டு பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் 2008-09 ம் ஆண்டில் 351 எக்டரில் பூண்டு பயிரிடப்பட்டு 2,067 டன் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் 5,889 கிலோ/ ஹெக்டர் ஆகும்.

÷தமிழ்நாட்டில் திண்டுக்கல், நீலகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் பூண்டு அதிக அளவில் பயிரிடப்படுகிறது. வியாபாரிகள் மத்தியப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், கர்நாடகம், குஜராத் ஆகிய மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்கின்றனர்.

÷நீலகிரியில் இருந்து பிப்ரவரியிலிருந்து பூண்டு வரத்து தொடங்கும். எனவே விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுப்பதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, மேட்டுப்பாளையம் பூண்டு மண்டியில் நிலவிய விலை நிலவரங்களை ஆய்வு செய்தது.

**ஆய்வின் முடிவு:** அறுவடையின்போது, அதாவது பிப்ரவரி,மார்ச் 2012-ல் பூண்டின் விலை கிலோவுக்கு ரூ. 75.80 வரை நிலவும். அதன்பிறகு பூண்டின் விலை அதிகரிக்க வாய்ப்புகள் இல்லை. எனவே விவசாயிகள் இருப்பு வைக்காமல் பூண்டை விற்பனை செய்யலாம்.

**மேலும் விவரங்களுக்கு:** ந.அஜ்ஜன், இயக்குனர், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-641003. தொலைபேசி: 0422-2431405.

**தொழில்நுட்ப விவரங்களுக்கு:** ப.பரமகுரு, பேராசிரியர் மற்றும் தலைவர், வாசனை மற்றும் நறுமணப் பொருள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 641003. தொலைபேசி 0422-6611284. \ செல்போன் -94423 28942.

**அறுவடை தொடங்கியது: செங்குன்றம் மார்க்கெட்டுக்கு நெல் வரத்து**

First Published : 02 Feb 2012 05:48:47 AM IST

செங்குன்றம், பிப். 1: திருவள்ளூர் மாவட்டத்தில் நெல் அறுவடை தொடங்கியதை அடுத்து ஊத்துகோட்டை, பெரியபாளையம், தண்டலம், கன்னிகைப்பேர், வெங்கல், ஆரணி, திருத்தணி, பள்ளிபட்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும் சுமார் 2000 டன் நெல் மூட்டைகள் செங்குன்றம் நெல் மார்கெட்டுக்கு கொண்டு வரப்படுகிறது.

**"இயற்கை விவசாயம் காலத்தின் கட்டாயம்'**

First Published : 01 Feb 2012 03:32:44 PM IST

புதுக்கோட்டை, ஜன. 31: இயற்கை விவசாயத்தை மீட்டெடுப்பது காலத்தின் கட்டாயம் என்றார் ஆத்மா மாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினரும், கறம்பக்காடு இயற்கை முன்னோடி விவசாயியுமான ச.வே. காமராசு.

புதுக்கோட்டை மாவட்டம், கிள்ளுக்கோட்டை கிராமத்தில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், புதுக்கோட்டை கிராம வள மையம் மற்றும் நபார்டு கிராம மேம்பாட்டுத் திட்டம் சார்பில் அண்மையில் நடைபெற்ற இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு முகாமில் மேலும் அவர் பேசியது:

இயற்கை விவசாயத்தின் மூலம் இயற்கை உயிரி உரங்கள், இலை, தழைகளைப் பயன்படுத்தி உரச் செலவுகளை குறைத்து, நல்ல சத்தான, உடல் நலத்திற்கு எந்தவிதத் தீங்கும் விளைவிக்காத உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து பயன்படுத்த முடியும்.

தழை, மணி, சாம்பல் சத்துகளுக்கு அசோஸ்பைரில்லம், அசிட்டோ பாக்டீரியா மற்றும் நீலப்பச்சைப்பாசி அசோலா ஆகியவற்றையும், சூடோமோனாஸ் டிரைக்கோடெர்மா விரிடி போன்ற பூஞ்சாண மருந்துகளையும் பயன்படுத்துவதன் மூலம் இயற்கை நுண்ணுயிர் நோய் எதிர்ப்பு சக்தி நாம் சாகுபடி செய்யக்கூடிய பயிர்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

நாம் விவசாயம் செய்யும் போது வேளாண்மை துறையில் மானிய விலையில் வழங்கப்படும் இந்த வேளாண் இடுபொருள்களை அவசியம் வாங்கி பயன்படுத்த வேண்டும்.

மேலும், பஞ்சகாவ்யா, இயற்கை பூச்சிவிரட்டி, அமிர்த கரைசல், மீன் அமிலக் கரைசல் போன்றவற்றை பூச்சிவிரட்டியாகவும், பயிர் வளர்ச்சி ஊக்கியாகவும் பயன்படுத்த வேண்டும். வெளி இடுபொருள்களை முடிந்தவரை தவிர்த்து, நமது தோட்டத்திலேயே கிடைக்கக் கூடிய பண்ணைக் கழிவுகளை உரமாக்கி பயன்படுத்த வேண்டும்.

இயற்கை விவசாயம் என்பது புதிது அல்ல. நமது முன்னோர்கள் செய்த விவசாயத்தை, நாம் மறந்து விட்ட விவசாயத்தை மீட்டெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் நமது சுற்றுச்சூழலை பாதுகாப்பதோடு, இயற்கை உணவுகளைப் பயன்படுத்தி நலமுடன் வாழ முடியும் என்றார் காமராசு.

முகாமுக்கு, ஊராட்சித் தலைவர் கே. முருகேசன் தலைமை வகித்தார். முன்னதாக எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன இணைத் திட்ட அலுவலர் எஸ். முருகேசன் வரவேற்றார். கிள்ளுக்கோட்டை நபார்டு பிரபா உழவர் மன்றச் செயலர் ஆண்டனி லாரன்ஸ் நன்றி கூறினார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**முருங்கை விலை கடும் உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,06:57 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : ஈரோட்டில் முருங்கை விளைச்சல் அதிரித்தும், விற்பனை அதிகாரிப்பால், விலை குறையாமல் உள்ளது. காய் ஒன்று எட்டு ரூபாய் வரை விற்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டம், அந்தியூர், கோபி, சத்தி, தாளவாடி, பவானி, கவுந்தப்பாடி மற்றும் பெருந்துறை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதியில் முருங்கை அதிகளவு விளைச்சலாகிறது. சென்றாண்டு நல்ல மழையால், விளைச்சல் இருமடங்காக உயர்ந்துள்ளது. எனினும், விற்பனை அதிகரித்துள்ளதால், விலை குறையாமல் உள்ளது. முகூர்த்த சீஸனில் முருங்கை காய் ஒன்று எட்டு ரூபாய்க்கும், இதர நாட்களில் ஐந்து ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

ஈரோடு, "நேதாஜி' பெரிய மார்க்கெட் காய்கறி வியாபாரி தேவராஜ் கூறுகையில், ""ஈரோடு சுற்றுவட்டாரந் பகுதியில் இருந்து தினசரி, மார்க்கெட்டுக்கு ஐந்து ஆட்டோக்கள் வரை முருங்கை காய் கொண்டு வருகின்றனர். இங்கிருந்து சின்னமார்க்கெட், வீரப்பன்சத்திரம், கருங்கல்பாளையம் உள்ளிட்ட நகர்ப்பகுதியில் உள்ள சில்லறை காய்கறி கடைகளுக்கு அனுப்பப்படுகிறது.

சென்றாண்டு பெய்த நல்ல மழையால், தற்போது விளைச்சல் இருமடங்காக உள்ளது. எனினும், விற்பனை அதிகரிப்பால், விலை குறையாமல் உள்ளது. சென்ற மாதங்களில் மூன்று முருங்கைக் காய் பத்து ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, ஒரு காய் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. முகூர்த்த நாட்களில் மட்டும் காய் ஒன்று எட்டு ரூபாய்கு விற்கப்படுகிறது," என்றார்.

**பூண்டை இருப்பு வைக்காமல் விற்க விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,00:36 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : பூண்டின் விலை, பிப்., மார்ச் மாதங்களில், கிலோவிற்கு ரூபாய் 75 முதல் 80 வரை இருக்கும்; அதன் பின்னர் விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை; விவசாயிகள் இருப்பு வைக்காமல் விற்பனை செய்ய, வேளாண் பல்கலை அறிவுறுத்தியுள்ளது.

நறுமண பயிர்களில், பூண்டு முக்கிய பயிராக உள்ளது. இந்தியாவில் வாசனை மற்றும் சுவையூட்டும் பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இதை, பிற நறுமண பொருட்களுடன் ஒப்பிடுகையில், அதிக சத்துள்ளதாக விளங்குகிறது.

இதில் புரதம், பாஸ்பரஸ், பொட்டாசியம், கால்சியம், மக்னிசியம், கார்போ ஹைட்ரேட் ஆகியவை நிறைந்துள்ளன. பச்சை பூண்டில் அஸ்கார்பிக் அமிலம் அதிகளவில் உள்ளது.

சீனாவில் அதிகளவில் பூண்டு உற்பத்தியாகிறது; உலகத்தின் மொத்த உற்பத்தியில், 56.85 சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது. இந்தியா (15), வங்காள தேசம் (2.50), கொரியா மற்றும் மியான்மர் (2.19), ரஷ்யா (1.98) சதவீ
தங்களுடன் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பூண்டை இறக்குமதி செய்த காலம்போய், ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இந்தியா

முன்னேறியுள்ளது. தற்போது, வங்காளதேசம், பாகிஸ்தான், தாய்லாந்து மற்றும் மலேசியா போன்ற நாடுகளுக்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த 2010-11ல், இந்தியாவில் பூண்டு ஏற்றுமதி 17 ஆயிரத்து 300 டன்; மதிப்பு 6977.31 லட்சம். ஏற்றுமதியில் 62.14 சதவீதமும், மதிப்பீட்டில் 43.60 சதவீதமும் உயர்ந்துள்ளதாக, நறுமண பொருட்கள் வாரியம் அறிவித்துள்ளது. பூண்டு பயிரிடப்படும் பரப்பு மற்றும் உற்பத்தியில், இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது. இங்கு, 2.09 லட்சம் எக்டரில், 12.64 லட்சம் டன் உற்பத்தியாகிறது. இதில், மத்தியப்பிரதேசம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது; இந்தியாவின் மொத்த உற்பத்தியில், 26 சதவீத பூண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் அக்-நவ., மற்றும் ஜூன்-ஜூலை ஆகிய இரு பருவங்களில் பயிரிடப்படுகின்றன; கடந்த 2008-09 ல் 351 எக்டர் பரப்பில், 2067 டன்கள் உற்பத்தியாகின. திண்டுக்கல், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில், அதிகளவு பயிரிடப்படுகின்றன; மத்தியப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

மேட்டுப்பாளையம் பூண்டு மண்டியில் உள்ள விலை விவரங்களை, தமிழ்நாடு வேளாண் பல்கலையின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு செய்தது. இதன் முடிவில், பிப்., மார்ச்-ல் பூண்டின் விலை, கிலோவிற்கு ரூபாய் 75 முதல் 80 வரை இருக்கும்; அதன் பின்னர், விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை. எனவே, விவசாயிகள் இருப்பு வைக்காமல் விற்பனை செய்ய, பல்கலை பரிந்துரைக்கிறது.இவ்வாறு, வேளாண் பல்கலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரு டன் கரும்புக்கு ரூ.3000 வேணும் தஞ்சையில் நல்லக்கண்ணு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,02:46 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் கலந்துகொள்ள வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக்குழு தலைவர் நல்லகண்ணு கூறியதாவது: தானே புயலால் கடலூர், விழுப்புரம் உட்பட பல்வேறு மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது மத்திய அரசில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க சட்டம் உள்ளது. அதைத் திருத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். காவிரி பாசன மாவட்டங்களில் உள்ள பாசன வாய்க்கால்கள், ஏரிகளை சீரமைக்க ரூபாய் 271 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கான முதல்கட்ட பணிகள் நடந்தது. இரண்டாவது கட்ட பணிகளையும் துவங்க வேண்டும். தஞ்சை, பட்டுக்கோட்டை, அரியலூர் வரையிலான அகல ரயில்பாதை பணியை துரித படுத்த வேண்டும். அ.தி.மு.க., தேர்தல் அறிக்கையில் கரும்பு டன் ஒன்றுக்கு ரூபாய் 2500 தருவதாக அறிவித்தனர். தற்போது 2100 என அறிவித்துள்ளனர். அதை மூன்றாயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும்.

கூடங்குளம் அனுமின்நிலைய திட்ட பேச்சுவார்த்தையில் சில அரசியல் கட்சிகள் அடிதடியில் ஈடுபட்டது வருத்தத்தை அளிக்கிறது. மத்திய மாநில அரசுகள் அப்பகுதி மக்களின் அச்சத்தை போக்கி பணியை துவங்க வேண்டும். காவிரி இறுதி தீர்ப்பு வந்து ஐந்தாண்டுகள் ஆகிறது. அந்த தீர்ப்பினை மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டு தமிழக உரிமையை காக்க வேண்டும். தமிழக மீனவர்கள் உரிமையை காக்க கச்சத்தீவை மீட்க வேண்டும். தமிழக அமைச்சர்களை அடிக்கடி மாற்றுவது நிர்வாக சீர்கேட்டை ஏற்படுத்தும். மின் கட்டணம் உயர்வு சாதாரண மக்களை பாதித்துள்ளது. மின்வாரியத்தை முறைப்படுத்த வேண்டும். இவ்வாறு நல்லக்கண்ணு கூறினார்.

**கைக்கு வந்து சேராத பயிர் காப்பீடு தொகைகையை பிசையும் கடலாடி விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 01,2012,21:52 IST

கருத்தை பதிவு செய்ய

சாயல்குடி :கடலாடி அருகே புனவாசல் வேளாண் கூட்டுறவு சங்கத்தில் 2009க்கான பயிர்க் காப்பீடுத் தொகை வழங்காமல் அதிகாரிகள் இழுத்தடிப்பு செய்கின்றனர். இதனால் பயிர் காப்பீடு செய்வதில் விவசாயிகள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்.புனவாசல், பாடுவனேந்தல் உள்ளிட்ட கிராமங்களிலிருந்து 701 விவசாயிகள் 2009ல் பயிர்க் காப்பீடு செய்தனர். சில மாதங்களுக்கு முன் காப்பீடு வழங்கப்பட்டது. காப்பீடு தொகை பதிவில் தவறு தொடர்பாக செயலர், வி.ஏ.ஓ., சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

இதையடுத்து சில பயனாளிகளுக்கு வழங்கியதோடு பயிர் காப்பீடு தொகை நிறுத்தப்பட்டது. ஏமாற்றமடைந்த விவசாயிகள் கலெக்டர் அருண்ராயிடம் புகார் கொடுத்தனர். கலெக்டர் நியமித்த அதிகாரி, புனவாசல் கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு நடத்தினார். இதில் தரிசு நிலங்கள், இரு முறை பதிவு செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு, பயனாளிகள் பட்டியலில் இருந்து 87 பேர் நீக்கப்பட்டனர். இறுதியாக ஏக்கருக்கு ரூ.5,400 வழங்க முடிவு செய்தனர்.

விவசாயிகள் கூறுகையில், ""இரு மாதங்கள் ஆகியும் காப்பீடுத் தொகை வழங்கவில்லை. பலரிடமும் முறையிட்டும் பலனில்லை. பயிர் காப்பீடு செய்வதில் நம்பிக்கை இழந்து விட்டோம், என்றனர்.கூட்டுறவு சங்க செயலர் தங்கப்பாண்டி கூறியதாவது: காப்பீடுத்தொகை வழங்க கலெக்டர் அருண்ராய் அனுமதி வழங்கிவிட்டார். கூட்டுறவு இணைப்பதிவாளர் கையெழுத்திட்ட பின், கடலாடி மத்திய கூட்டுறவு வங்கி மூலம் காப்பீடுத் தொகை வழங்கப்படும், என்றார்.

---

தினகரன்

## பருத்தி அறுவடை பணி தீவிரம் புயல் நிவாரணம் வழங்காததால் நஷ்டத்தை சந்தித்த விவசாயிகள்

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் ஆசனூர், எறஞ்சி, வலசை, காய்ச்சக்குடி, செங்குறிச்சி, நைனாக்குப்பம், செம்மணங்கூர், ஆரியநத்தம், கூத்தக்குடி, பாண்டூர், நகர் மன்னார்குடி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் 6 மாத பயிரான வீரிய ஒட்டுரக பருத்தியை அதிக அளவு பயிரிட்டு இருந்தனர். சுமார் 100 ஏக்கருக்கு மேல் உளுந்தூர்பேட்டை பகுதியில் பருத்தியை விவசாயிகள் பயிரிட்டு இருந்தனர்.

பருத்தி நன்கு காய்த்து வந்த நிலையில் கடந்தமாதம் வீசிய தானே புயலால் பருத்தி காய்கள் கீழே உதிர்ந்து நாசமானது. மேலும் செடியும் சாய்ந்து அழுகி போனது. இதனால் பருத்தி பயிரிட்ட விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்தனர். இதுகுறித்து ஆசனூர் கிராமத்தை சேர்ந்த ராமகொளஞ்சி என்ற விவசாயி கூறிய போது: ஒரு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வரை செலவு ஆகிறது. ஆனால் அறுவடை நேரத்தில் தானே புயலினால் பருத்தி காய்கள் விழுந்து நாசமானதால் அதிக அளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தற்போது அறுவடை நடைபெற்று வரும் நிலையில் ஒரு ஏக்கருக்கு கடந்த ஆண்டு 10 முதல் 15 குவிண்டால் வரை விதை நீக்கப்பட்ட பருத்தி கிடைத்தது.

ஆனால் இந்த ஆண்டு புயல் பாதிப்பினால் 8 குவிண்டால் கிடைப்பதே அரிதாக உள்ளது. செலவு செய்த தொகை கூட கிடைக்கவில்லை. நெல், உளுந்து விவசாய பயிர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்கப்பட்டு வரும் நிலையில் பருத்தி பயிரிட்ட விவசாயிகளுக்கு மட்டும் இதுவரை எவ்வித நிவாரண உதவிகளும் வழங்க வில்லை.

இது குறித்து வேளாண் துறை அதிகாரிகளிடம் கேட்டதற்கு அரசு நிவாரண உதவி ஒதுக்கீடு செய்யப்பட வில்லை என தெரிவித்தார். எனவே பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கும் உரிய நிவாரண உதவிகள் வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பருத்தி பயிரிட்ட விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

## விலை வீழ்ச்சியால் அரளி பூ அறுவடை நிறுத்தம்

கருத்துகள்

அரூர்: விலை வீழ்ச்சி காரணமாக அரளி பூவை பறிக்காமல் விவசாயிகள் செடியிலேயே விட்டுள்ளனர்.

தர்மபுரி, அரூர், பாலக்கோடு, பென்னாகரம், கடத்தூர், மோட்டாங்குறிச்சி, நத்தமேடு, பொம்மிடி, திப்பம்பட்டி, தண்டா உள்பட பல பகுதிகளில் அரளி பூ அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. செவ்வரளி, வெள்ளை அரளி ஆகிய பூச்செடிகளை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். நடவு செய்த 6வது மாதம் முதல் அரளி அறுவடைக்கு வருகிறது. கடந்த சில மாதங்களாக விலை மிகவும் குறைவாக உள்ளது. சில மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ அரளி பூ கி90 முதல் கி130 வரை விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ பூ கி15 முதல் கி20 வரை மட்டுமே விற்பனையாகிறது. பூ பறிப்பதற்கான கூலி, தோட்டத்தில் இருந்து சந்தைக்கு கொண்டு செல்ல ஆகும் செலவு, வியாபாரிகள் கமிஷன் உள்ளிட்ட பல செலவீனங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் பூக்களை பறிக்காமல் அப்படியே செடியில் விட்டுள்ளனர்.

விலை வீழ்ச்சியால் கவலையடைந்த பலர் செடிகளை அழித்து, வேறு பயிர்களை சாகுபடி செய்யத்துவங்கியுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, அரளி சாகுபடியில் வருடம் முழுவதும் தொடர்ந்து பூ கிடைக்கும். சீசன் காலங்களில் வெளியூர் வியாபாரிகள் சந்தைக்கே வந்து பூக்களை கொள்முதல் செய்வார்கள். கடந்த சில நாட்களாக ஒரு கிலோ பூ கி15 முதல் கி20 வரை மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. இதனால் எங்களுக்கு லாபம் கிடைப்பதில்லை. பூக்களை பறிப்பதற்கான கூலி கூட கிடைப்பதில்லை. இதனால் வேறு பயிருக்கு மாற முடிவு செய்துள்ளோம் என்றனர்.

## ஈமு கோழி வளர்ப்பு பயிற்சி

கருத்துகள்

சிவகங்கை: முன்னாள் படைவீரர்களுக்கு ஈமுகோழி வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதுகுறித்து முன்னாள் படைவீரர் உதவி இயக்குநர் கூறியதாவது:
முன்னாள் படைவீரர்களுக்கான ஈமுகோழி வளர்ப்பு பயிற்சி ஈரோட்டில் அளிக்கப்பட உள்ளது. ஈமு கோழி வளர்ப்பும் சமீப காலத்தில் ஒரு சிறந்த பண்ணை தொழிலாக உள்ளது. இதன்மூலம் குறுகிய காலத்தில் அதிக லாபம் பெறலாம். இத்தொழிலுக்கு சிறிய அளவிலான முதலீடும், இடவசதியும் இருந்தால் போதும். விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள் சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

---

தினத் தந்தி

# கொலக்கம்பை பகுதிகளில் பீன்ஸ் பயிரிட தயாராகும் விவசாயிகள்

கொலக்கம்பை, பிப்.2–

விரைவில் கோடை காலம் தொடங்க உள்ள தால் கொலக்கம்பை பகுதியில் பீன்ஸ் பயிரிட விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

விலை வீழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தில் பணப்பயிராக விளங்கி வந்தது சிறு தேயிலை விவசாயம். இதற்கு கடந்த சில வருடங் களுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது. பச்சை தேயிலைக்கு உரிய விலை கிடைக்க கோரி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் விவசாயிகள் மட்டுமல்லாமல் அனைவரும் பல்வேறு கட்ட போராட்டங் களில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போதைய அரசு நீலகிரி விவசாயிகளின் நலன் கருதி மாற்றுப்பயிர் செய்ய ஆலோ சனை வழங்கியது. மேலும் மானியமும் வழங்கப்பட்டது. இதன்படி கொலக்கம்பை பகுதிகளில் பச்சை தேயிலை யின் விலை வீழ்ச்சியின் காரணமாக விவசாயிகள் மலை தோட்ட காய்கறி பயிர் களான பீன்ஸ், கேரட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட பயிர்களை பயிரிட ஆரம்பித்தனர்.

மேரக்காய்

ஆண்டு தோறும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் கடும் உறை பனி பொழிவு நிலவும். இந்த உறை பனி பொழிவால் கொலக்கம்பை பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த மேரக் காய் கொடிகள் முற்றிலும் கருகி, காய்ந்து விட்டது.

தற்போது விவசாயிகள் இதனை அகற்றி விட்டு பீன்ஸ் பயிட்டு வருகின்ற னர். இதன் படி கொலக்கம்பை பகுதிகளில் பல ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு இருந்த மேரக் காய் கொடிகளை விவசாயிகள் அகற்றி உள்ளனர்.

சித்திரை திருநாள்

இந்த நிலங்களில் பீன்ஸ் பயிரிடுவதற்கான நடவடிக்கை களை விவசாயிகள் எடுத்து வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் வரும் தைப்பூசம் அன்று தங்களின் நிலங்களில் புஷ் பீன்ஸ், புஷ் பாம்பே உள்ளிட்ட வகை பீன்ஸ்களை பயிர் செய்ய திட்டமிட்டு உள்ளனர்.

தைப்பூசத்தன்று நடவு செய்யப்படும் பீன்ஸ் 3 மாதத் தில் நன்கு செழித்து நல்ல மகசூல் தரும். இதனை சித்திரை திருநாளுக்கு அறு வடைக்கு தயாராகி விடும். அதே சமயத்தில் நல்ல விலை யும் கிடைக்கும் என விவசாயி கள் எதிர்பார்த்து பீன்ஸ் விவ சாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# வேளாண்மை செய்திகள்

## காடை வளர்ப்பு முறைகள்



காடை வளர்ப்பு விவசாயிகளுக்கு ஒரு முக்கிய தொழிலாக விளங்குகிறது. குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் காடையை வளர்த்து அதிக லாபம் பெறலாம். காடைகள் மாறுபட்ட தட்பவெப்ப நிலையில் எளிதில் வளரக்கூடியவை. காடைகள் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவை. இவற்றை இறைச்சிக்காக 5 முதல் 6 வாரமும், முட்டைக்காக 10 மாதங்கள் வரையிலும் வளர்க்கலாம்.

### காடை வளர்ப்பு

நியூசிலாந்து காடை, சைனா காடை, கலிபோர்னியா காடை, ஜப்பானிய காடை, பாப் வெள்ளை காடை, மடகாஸ்கர் காடை, நியூ கினியா மலைக்காடை ஆகிய முக்கிய காடை இனங்களாகும். ஜப்பானிய காடைகளை ஆழ்கூள முறை கூண்டு முறை, கலப்பு முறைகளில் வளர்க்கலாம். ஆழ்கூள முறை காடை வளர்ப்புக்கு ஏற்றது என்றாலும் கூண்டு வளர்ப்பு முறையே சிறந்ததாகும்.

ஆழ்கூள முறையில் 1 சதுர அடியில் 5 காடைகள் வரை வளர்க்கலாம். முதல் 2 வாரம் வரை ஆழ்கூள முறையில் வளர்த்து பின்னர் கூண்டுகளுக்கு மாற்றி 6 வாரம் வரை வளர்ப்பதே சிறந்த பராமரிப்பு முறையாகும். கூண்டு முறையில், கூண்டுகள் ஒவ்வொன்றும் 20 செ.மீ. வரை இருக்க வேண்டும். கூண்டின் அடிப்பகுதி, பக்கவாட்டு கம்பி வலை 1.5–க்கு 1.5 செ.மீ. உள்ளதாக இருக்க வேண்டும்.

### தீவன மேலாண்மை

கம்பி வலைக்கடியில் தகடுகள் பொருத்த வேண்டும். இதன் மூலம் அடுக்கில் உள்ள காடைகளின் கழிவு கீழ் அடுக்கில் உள்ள காடைகளின் மீது விழாது. இந்த தகடுகளில் விழும் கழிவுகளை தினந்தோறும் அகற்றும் படியான வடிவமைப்பு கொடுக்க வேண்டும். ஒவ்வொன்று கூண்டையும் 4 அல்லது 5 அடுக்குகள் கொண்டதாக அமைத்து கொள்வது சிறந்தது.

இதன்மூலம் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் காடைகளை வளர்க்க இயலும். ஜப்பானிய காடைகளுக்கு கோழி தீனியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களே பயன்படுத்தப்படுகின்றன. காடை குஞ்சுக்கு பருவத்தில் வழங்கும் தீவனம் 26–28 சதவீத புரதமும், 2,800 கிலோ கலோரி எரிசக்தி கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

### சத்துக்கள்

இறைச்சிக்காக வளர்க்கும் போது ஆரம்பகால தீவனத்தை வாங்கி 75 கிலோ தீவனத்துடன் 5 கிலோ வீதம் புண்ணாக்கு தூளை கலந்து கொடுக்கலாம். காடைகளுக்கு தீவனம் அளிக்கும் போது புரதம், எரிசக்தி, தாது உப்புக்கள் தேவையான அளவு உள்ளதா? என்று கணக்கிட்டு அளிக்க வேண்டும். 6 வார வயது வரை ஒரு காடை 400 முதல் 500 கிராம் தீவனத்தை உட்கொள்ளும்.

சுத்தமான நீரை, சிறிய தண்ணீர் தட்டுகளில் தானியங்கி உறிஞ்சும் தட்டுகள் மூலம் கொடுப்பது சிறந்தது. 7 வாரத்தில் இருந்து முட்டை கிடைக்க தொடங்கி விடும். ஒரு ஆண் காடையுடன் 2 அல்லது 3 பெண் காடைகளுடன் சேர்த்து இனச்சேர்க்கை செய்வது நல்லது. காடை குஞ்சுகள் பொறித்தவுடன் வளர்வதற்கு 100 டிகிரி புருடர் வெப்பம் இருக்க வேண்டும்.

### அதிக லாபம்

போதிய வெப்பம், பாதுகாப்பு, முறையான கிருமி நீக்கம், சுத்தமான குடிநீர், தரமான கலப்பு தீவனம் அளித்தால் காடைகளில் இறப்பு விகிதத்தை குறைத்து நோயின்றி பாதுகாக்கலாம். பின்னர் விற்பனை செய்யும் போது அதிக அளவில் லாபம் பெறலாம்.

**விலை அதிகரிக்க வாய்ப்பு குறைவு:**

## இருப்பு வைத்துள்ள பூண்டை உடனே விற்பது நல்லது

### விவசாயிகளுக்கு, வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

இந்தியாவில் உற்பத்தியாகும் விவசாய பயிர்களில் பூண்டும் ஒன்றாகும். இது வாசனை மற்றும் சுவையூட்டும் பொருளாக பயன்படுகிறது. மற்ற நறுமண பயிர்களை ஒப்பிடுகையில் பூண்டு அதிக சத்துள்ள ஒன்றாகும். இதில் புரதம், பாஸ்பரஸ், பொட்டாசியம், கால்சியம், மக்னீசியம் மற்றும் கார்போஹைட்ரேட் ஆகியவை அதிக அளவில் உள்ளது. பச்சை பூண்டில் அஸ்கார்பிக் அமிலம் அதிகமாக உள்ளது.

### இரண்டு பருவங்களாக

உலக அளவில் பூண்டு உற்பத்தியில் சீனா முதல் இடத்தில் உள்ளது. இந்தியா பூண்டு பயிர் செய்யும் பரப்பு மற்றும் உற்பத்தியில் 2–வது இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் மராட்டியம், குஜராத், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், ஒரிசா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் அதிகம் விளைவிக்கப்படுகிறது.

செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் பூண்டு விதைக்கப்பட்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்ட ஊட்டி–1 ரகம் நீலகிரி மாவட்டத்தில் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது.

### வெளிமாநிலங்களில் கொள்முதல்

தமிழகத்தை பொறுத்தவரை, அக்டோபர்–நவம்பர் மற்றும் ஜூன்–ஜூலை ஆகிய இரண்டு பருவங்களில் பூண்டு பயிர் செய்யப்படுகிறது. தமிழகத்தில் திண்டுக்கல், நீலகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது.

மேலும் வியாபாரிகள் மராட்டியம், இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, மற்றும் குஜராத் ஆகிய வெளி மாநிலங்களில் இருந்து அதிக அளவில் பூண்டை கொள்முதல் செய்கின்றனர்.

### விற்பனை முடிவு

நீலகிரி மாவட்டத்தில் விளையும் பூண்டு பிப்ரவரி மாதத்தில் இருந்து வரத் தொடங்கும். இதற்கு ஏற்றவாறு விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் மேட்டுப்பாளையம் பூண்டு மண்டியில் நிலவிய விலை நிலவரங்களை ஆய்வு செய்தது.

இதன்படி அறுவடையின் போது பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஒரு கிலோ பூண்டின் விலை ரூ.75 முதல் ரூ.80 வரை நிலவும். அதற்கு பிறகு பூண்டின் விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை. எனவே இருப்பு வைக்காமல் பூண்டை விற்பனை செய்யுமாறு விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

தகவல்:– ந.அஜ்ஜன், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், வேளாண் பல்கலைக்கழகம், கோவை.

**அதிக விளைச்சல் தரும்**

## வீரிய ஒட்டு ரக மிளகாய் சாகுபடி



தமிழகத்தில் வீரிய ஒட்டு ரக மிளகாய் சாகுபடி அதிக விளைச்சலை அளித்துள்ளது. இதற்கு யூ.எஸ்.612 என்ற வீரிய ஒட்டு ரக மிளகாய் ரகத்தை சாகுபடி செய்தது முக்கிய காரணம் ஆகும்.

### சாகுபடி முறைகள்

யூ.எஸ்.612 என்ற வீரிய ஒட்டு ரக மிளகாய் பயிர்களை சாகுபடி செய்ய 80 கிராம் விதைகள், மண் புழு உரம் 60 கிலோ, வேப்பம்புண்ணாக்கு உரம் 20 கிலோ, 19:19:19 என்ற விகிதத்தில் நீரில் கரையும் உரம் 3½ கிலோ, நுண்ணுரம் 4 கிலோ தேவை. முதலில் சாகுபடி செய்யும் நிலத்தை நன்றாக உழ வேண்டும்.

பின்னர் கல், மண் கட்டிகளை அகற்றி 9 மீட்டர்*1 மீட்டர் நீள, அகலத்தில் 20 செ.மீ. உயரத்தில் 8 மேட்டுப்பாத்திகளை தயார் செய்ய வேண்டும். இவைகளில் ஒவ்வொரு மேட்டுப்பாத்திக்கும் நன்கு மக்கிய 15 கிலோ தொழு உரமிட்டு, 17:17:17 என்ற விகிதத்தில் நீரில் கரையும் காம்ப்ளெக்சை பாத்தி ஒன்றுக்கு 500 கிராம் வீதம் இட்டும் நன்கு கொத்தி விட வேண்டும்.

### விதைகளை தூவுதல்

தொடர்ந்து சதுர மீட்டருக்கு 3 கிராம் டிரைக்கோடெர்மா விரிடியை 100 கிராம் வேப்பம்புண்ணாக்குடன் கலந்து பாத்திகளின் மீது வேண்டும். பாத்திகளை விதைப்புக்கு தயார் செய்து, இவைகளில் 4 அங்குல ஆழத்தில் கோடுகள் இட்டு, ஒவ்வொரு விதையாக விதைப்பு செய்து மணல், எரு கலவை கொண்டு விதைகளை மூட வேண்டும்.

பாத்திகளின் ஓரங்களில் எறும்பு மருந்து தூவி பராமரிக்க வேண்டும். விதைப்பு பரப்பின் மீது வைக்கோல் கொண்டு போர்வை கனத்தில் மூடாக்கு அமைக்க வேண்டும். பூவாளி மூலம் மண்ணின் ஈரத்தன்மைக்கு ஏற்றவாறு நீர் ஊற்றி பராமரிக்க வேண்டும். விதைகள் நன்கு முளைத்தவுடன் 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற அளவில் டைட்டோலான் மருந்தினை கலந்து பாத்திகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் விதைகள் 42 நாட்களில் நாற்றுகளாக வளர்ந்து நடவுக்கு தயாராகி விடும்.

### நடவு செய்தல்

நடவுக்கு தயாரிக்கப்பட்ட நிலத்தை 5 முறை உழவு செய்து ஏக்கருக்கு 800 மில்லி வீதம் பாசலின் மருந்தை, 200 லிட்டர் நீரில் தெளித்து, சீராக நீர்ப்பாசனம் செய்து களைக்கட்டுப்பாடு செய்ய வேண்டும். பின்னர் களைக்கொல்லியிட்ட 6–வது வாரத்தில் ஏக்கருக்கு 2 ஆயிரம் கிலோ ஆட்டு எரு இட்டும், அடியுரமாக மணிச்சத்தை கொடுக்கக்கூடிய டி.ஏ.பி. உரங்களையும் இட்டு கடைசி உழவு செய்து மாலை வேளையில் நடவு செய்ய வேண்டும்.

ரசாயன ஊக்கிகளை தெளித்தும், சாறு உறிஞ்சும் பூச்சிகளை பகாசஸ், கோசாவேட், இமிடா அசிபேட் ஆகிய மருந்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு 28 ஆயிரம் கிலோ மிளகாய் மகசூலாக கிடைக்கும். செலவுகள் நீங்கலாக இதன் நிகர வருமானம் ரூ.1 லட்சத்து 57 ஆயிரத்து 500 ஆகும். எனவே விவசாயிகள் இந்த மிளகாய் ரகத்தை சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்.